உ

செந்திலாண்டவன் துணை.



456

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# அற்புதப் பாசுரங்கள்

பாடதிட்டத்திற் குரியது.

திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை.

# திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பரிசு.

456

~~1945-ம் ஆண்டு~~

## திருவையாற்றில் தங்கப் பதக்கம் அளித்தல்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாமூரில் அவதரித்தவர். நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினல் அமண் சமயஞ் சார்ந்தார். தமக்கையார் திலகவதியார் வீரட்டானத் திறைவனை வேண்ட, சூலை நோயால் தடுத்தாட்கொள்ளப் பெற்றார். நற்றமிழ் பாடி நாவுக்கரசென்ற நாமம் பெற்றார். அமணர்கள் அழுக்காறுற்று சுவாமிகளை நீற்றறையிலிட்டார். இறவாது பிழைத்தார். நஞ்சூட்டப் பெற்றார். சாவாதிருந்தார். யானையை ஏவினர். அக்கரியோ ஏவிய அமணரைக் கொன்றது. ஈற்றில் கல்லிற் பூட்டிக் கடலிற் பாய்ச்சினர். கல்லே தெப்பமாகக் கரையேறினர். இவ்வற்புதங்களைக் கண்ட மன்னனுஞ் சைவனானன். மன்னுயிரும் அந்நெறியே நின்றன. சிவத்தலங்கள் பல சென்றுச் சிவப்பணி புரிந்தார். அப்பூதியார் மகனுக்குப் பாம்பு விடத்தைத் தீர்த்தருளினர். மறைக்கதவினைத் திறப்பித்தார். கைலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டார். இன்னோரன்ன செயற்கரியச் செய்தபெரியார் திருநாவுக்கரசு சுவாமிகள். இவர் அருளியத் திருப்பதிகங்கள் இடையறாப் பேரன்பைப் பெருக்குவன. பணி செய்தலே கடமை

யெனப் பணிப்பன. திருநீற்றின் பெருமையைத் தெரிப்பன. சிவ வேடமே மெய்ப் பொருளெனச் சாற்றுவன. சிவபெருமானே முழுமுதற் கடவுளென முழங்குவன. இவர் அருளியத் திருப்பதிகங்களை இளைஞர்கள் பயில்வார்களாயின் எல்லா நலமும் பெறுவர். இக்கருத்துப் பற்றியே இப்பரிசு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது.

1. திருநாவுக்கரசு சுவாமிகளின் நிறை புகழ் என்றும் நிலவும் வண்ணம் இப்பரிசு அப்பெருமான் பெயரால் ஆண்டுதோறும் அளிக்கப்பெறும்.
2. திருவையாற்றில் நடைபெறும் ஆவணி மூல விழாவில் உரியவருக்கு இப்பரிசு வழங்கப்பெறும்.

பரிசளிப்புக்குரிய விதிகள்:

1. திருவையாற்றில் உள்ள உயர் நிலைப் பள்ளியில் (High school) 4, 5, 6-வது (IV, V & VI) பாரம் படிக்கும் மாணவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்குரியர்.
2. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியத் தேவாரப் பதிகங்களில் பாடத்திட்டமாக ஏற்படுத்தியிருக்கும் பாசுரங்களில் அடியிற்கண்ட 75 பாசுரங்களை மாணவர்கள் மனப்பாடம் செய்வதுடன், பண் ஒன்ற இசையுடனும் பாடவேண்டும். அவர்களில் இனிய குரல், இசை நயம், இராக தாளப் பொருத்தம், பொருள் விளக்கம் இவைகளில் முதல்வராக வருபவர் பரிசு பெறுவதற் குரியவராவர்.

3. இதற்குரிய இவ்வாண்டுத் தேர்வு (Examinaticn) திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் அவர்களால் நடத்தப்பெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் (                    )-ந் தேதிக்குள் தங்கள் ஊர், பெயர், வகுப்பு, வயது, மதம், குலம், தகுதி முதலிய விவரங்களுடனும் தலைமை ஆசிரியர் கையெழுத்துடனும் விண்ணப்பம் எழுதி, திருப்பனந்தாள் காசிமடத்துக்கு அனுப்பிக்கொள்ள வேண்டும். தேர்வில் கலந்துகொள்ள காசிமடத்திலிருந்து அனுமதிச்சீட்டும், பாடப்புத்தகமும் அனுப்பப்பெறும். அனுமதிபெற்ற மாணவர்கள் மட்டும் திருப்பனந்தாள் காசிமடத்திற்கு (            )-ந் தேதி காலையில் வந்து தேர்வில் கலந்துகொள்ளவேண்டும்.

4. முதன்மையாக தேர்ந்தெடுக்கப்பெற்ற மாணவர் திருவையாறு ஆவணி மூலத் திருவிழாவில் ஐயாறப்பர் திருமுன்பு நேரில் வந்து பரிசை பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பெறுவதற்குரியரல்லர்.

ஸ்ரீகாசிமடம்,
திருப்பனந்தாள்.

உத்தரவுப்படி,
S. பொன்னுசாமி முதலியார்,
காறுபாறு.

---

மாணவர்கள் மனனம் செய்யவேண்டிய பாசுரங்கள்:—

பதிகங்கள் 6 முழுதும் பாசுரங்கள் 61, குறுந்தொகைப் பாசுரங்களில் 3, திருவிருத்தம் 3, திருநேரிசை 3, திருத்தாண்டகம் 5, ஆக பாசுரங்கள் 75.

உ

செந்திலாண்டவன் துணை.

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள்

# மகேசுவரபூசை விழாவில்

# சைவசித்தாந்தப் பிரசங்கப் பரிசு

# ரூ. 1000—ரூபாய் ஆயிரம்.

ஐந்து வயதில் செந்திலாண்டவனருளால் ஊமை நீங்கப்பெற்று கந்தர் கலிவெண்பா பாடியருளியும், மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றும், திருமலைநாயக்க மன்னர் வேண்ட, மன்னன் முதல உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் உலகறிவூட்டுவான் நீதிநெறி விளக்கம் அருளியும், தருமையும் கமலையும், விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்த மாசிலாமணி தேசிகராயரைக் கண்டு, கேட்டுப், பண்டார மும்மணிக்கோவை பகன்றும், தில்லை, திருவாரூர் தெரிசித்து, மும்மணிக் கோவை, நான்மணிமாலை நவின்றும், காசி சென்று தமிழர்கள் பிற மொழிகளையும் கற்றல வேண்டுமென அறிவுறுத்துவான சகலகலாவல்லிமாலை பாடி யருளியும், உயிருள்ள சிம்மத்தின் மீதேறி மூசலாய மன்னன் ஔரங்கசீப் பாதுஷாவைக் கண்டு அன்னவரால் உயர்மதிப்புப் பெற்று, அம் மன்னன் உதவியால் ஸ்ரீ விசுவேசுவரர் ஆலயத்தை விளக்கமுறச் செய்தும், கேதார கட்டத்தில் அறச்சாலை நிறுவியும், இன்னோரன்ன செயற்கரிய பணி பல செய்தருளிய முனிவர் பெருமான் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் ஆவார்கள்.

ஷை சுவாமிகளின் மகேசுவரபூசை விழா காசியிலும், பனசையிலும் ஆண்டுதோறும் நடைபெறும். அம் முனிவர்பெருமான் ஞாபகார்த்தமாக, இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ௨0-ம் பட்டத்தில் விளங்கிவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களால் இந்த ஆயிர ரூபா பிரசங்கப் பரிசு ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது.

## பரிசளிப்புக்குரிய விதிகள் :

1. தனித்தமிழ் வித்வான் தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களோ, அல்லது அதற்குச் சமமான தமிழ்ப் புலமையுள்ளவர்களோ, சைவ சித்தாந்த சாத்திரம் நன்கு கற்றுணர்ந்து அந்தந்த தமிழ் வருஷத்தில் (சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய ஓராண்டு கால அளவிற்குள்) 75 எழுபத்தைந்துக்குக் குறைபாத சைவசமய சாத்திரப் பிரசங்கம் தமிழில் செய்திருப்பார்களாயின் அவர்கள் மட்டுமே இதிற் சலந்து கொள்வதற்குரியர். (அத்தகைய ரேடியோ பிரசங்கமும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பெறும்.)

2. அவர்களுள் பிரசங்கவன்மை, சைவசித்தாந்தப் பயிற்சி, ஒன்றுக்கு மேற்பட்ட ஜில்லாக்களில் சொற்பணி புரிந்தமை, பிறமொழிப் புலமை, பிறப்பொழுக்கம் முதலியவைகளில் முதன்மையாக வருபவருக்கே ஷை விழாவில் ரூ 1000 பரிசாக அளிக்கப்பெறும்.

3. இதற்குரியத் தேர்வு திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களால் ஷை மகேசுவரபூசை விழாவில் ஆண்டுதோறும் நடததப் பெறும். தலைவரவர்கள் தீர்ப்பே முடிவானது.

4. இதிற் கலந்துகொள்ள விருப்பமுடையார் தங்கள் பெயர், ஊர், தமிழ், ஆரியம், பிறமொழிப்புலமை, சைவசமய சாத்திரப் பிரசங்க எண், பணியாற்றிய தலங்கள் (அத்தாக்ஷியுடன்) திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுக்கு அந்தந்த வருஷம் ஏப்ரல்மீ 30உ க்குள் விண்ணப்பித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் பரிசீலனை செய்யப்பெற்று தேர்வில் கலந்துகொள்வதற்குரியவர்களுக்கு அனுமதிச் சீட்டு அனுப்பப்பெறும்.

5. ஒருமுறை பரிசுபெற்றவர் மறுமுறை பெறுவதற்குரியரல்லர்.

ஸ்ரீ காசிமடம்,<br>திருப்பனந்தாள்,

உத்தரவுப்படி,<br>**S. பொன்னுசாமி முதலியார்,**<br>காறுபாறு.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள்

## அருளிச் செய்த

## தேவாரப் பதிகங்கள்.

---

### திருவதிகைவீரட்டானம்.

பண்—கொல்லி

1. கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
        கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
        பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
        குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
        வீரட் டானத் துறையம்மானே ௧

2. நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தேன்
        நினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
        வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
        நணுகா மற்றுரந் துகரந் தமிடீர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
        வீரட் டானத் துறையம் மானே ௨

3. பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றார்
சுடுகின் றதசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. ௩

4. முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதான்
அன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௪

5. காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௫

6. சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்

உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. ௬

7. உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௭

8. வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௮

9. பொன்போ லமிளிர் வதோர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௯

10. போர்த்தா யங்கோரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்து மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே ௧௦

போது தனித் திருக்குறுந்தொகை

11. மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே ௧

12. நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே ௨

13. ஆளா னார்க்கா ளானாரை யடைந்துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாயந்துமண் ணாகிக் கழிவரே ௩

14. நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு தண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. ௪

15. பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர னாம நவில்கிலார்
ஆக்கைக் கேபிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே ௫

16. குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே ௬

17. வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே ௭

18. எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே ௮

19. நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே ௯

20. விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக்கடையமுன் னிற்குமே. ௧௦

## திருவதிகை வீரட்டானம்

### பண்—காந்தாரம்

21. சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த் திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௧

22. பூண்டதோர் கேழ லெயிறும் பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர் போலவெண் ணூ
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்தகட் டங்கக் கொடியும் [லும்
ஈண்டு செடிலப் புனலுமுடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௨

23. ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ திபாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௩

24. மடமான் மறிபொற் கலைபு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா தழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௪

25. பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலுமுடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௫

26. கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப் படாததோர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௬

27. கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௭

28. ஆடல் புரிந்த நிலையு மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதோர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௮

29. சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௯

30. நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னொன்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ்
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம் [சூழ்ந்து
[அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ௧௦

பொது

## விடந் தீர்த்த திருப்பதிகம்

### பண்—இந்தளம்

31. ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே க

32. இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே உ

33. மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்ப்பிலை
மூன்றுகொ லாங்கணை கையது வின்னாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே ங

34. நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவ ரூர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே ச

35. அஞ்சுகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே ரு

36. ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே சு

37. எழுகொ லாமவ ரூழிப டைத்தன
எழுகொ லாமவர் கண்டவி ருங்கடல்
எழுகொ லாமவ ராளுமு லகங்கள்
எழுகொ லாமிசை யாக்கின தாமே ௭

38. எட்டுக்கொ லாமவ ரீறில்பெ ருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடுமி னமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. ௮

39. ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினி னூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே. ௯

40. பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே. ௧௦

திருவையாறு பண்—காந்தாரம்

41. மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௧

42. போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்து மையா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௨

43. எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி
முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி யையா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௩

44. பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலு மையா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௪

45. ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௫

46. தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௬

47. கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்
அடியிணை யார்க்குங் கழலா னையா றடைகின்ற போது
இடிகுர லன்னதொ ரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௭

48. விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்து மையா றடைகின்ற போது
கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். அ

49. முற்பிறைக் கண்ணியினானை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது
[நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன் கூ

50. திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளொடும் பாடி
எங்கரு ணல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்னா வருவேன்
அங்கிள மங்கைய ராடு மையா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்
[கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன் க0

51. வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
[கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன் கக

போது

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்—காந்தார பஞ்சமம்

52. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே க

53\. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே ௨

54\. விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே ௩

55\. இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே ௪

56\. வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே ௫

57\. சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே ௬

58\. வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச் சென் றுருவங் காண்டலும்
நாடினே னாயிற்று நமச்சி வாயவே ௭

59 இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே ௮

60. முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென் றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே ௯

61. மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே ௧௦

திருநின்றியூர் திருக்குறுந்தொகை

62. அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின் றியூரைநீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே ௯

திருக்குறுக்கை வீரட்டம்,

திருநேரிசை

63. அணங்குமை பாகமாக வடக்கிய வாதிமூர்த்தி
வணங்குவா ரிடர்கடீர்க்கு மருந்துநல் லருந்தவத்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து காதலா மடியார்க்கென்றும்
குணங்களைக் கொடுப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே ௯

போது தனித்திருத் தாண்டகம்.

64. அப்பனீ யம்மைநீ யைய னுநீ
யன்புடைய மாமனு மாமி யுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூ ருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத் துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே ௧

திருவதிகை வீரட்டானம்

திருவடித் திருத்தாண்டகம்

65. அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
யருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணு மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவு தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி க

பொது தனித்திருத்தாண்டகம்

66. ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
யடங்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே உ

திருவாரூர் திருவிருத்தம்

67. ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாத னடித்தொண்ட னம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே உ

பொது நின்ற திருத்தாண்டகம்

68. இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
யியமான னாயெறியுங் காற்று மாகி

அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே க

திருவொற்றியூர் திருவிருத்தம்

69. இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை யிமயமென்னுங்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்ட நாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீரொற்றி யூருறை யுத்தமனே எ

திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

70. ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே க

திருவாரூர் திருத்தாண்டகம்

71. உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்பா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே க

திருவதிகைவீரட்டானம் திருநேரிசை

72. உறுகயி றூசல்போல வொன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவுநெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய பாதத்
தறுகயி றூசலானே னதிகைவீ ரட்டனீரே ௯

திருவையாறு திருவிருத்தம்

73. உற்றாரிலாதார்க் குறுதுணை யாவன வோதிநன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்கவை யாற னடித்தலமே ௫

திருப்புகலூர் திருத்தாண்டகம்

74. எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் திருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் பற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே ௧

திருவானைக்கா திருத்தாண்டகம்

75. எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தா
ரெம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றா
லல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே ௧

திருவையாறு திருத்தாண்டகம்

76. எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

திருக்கன்றாப்பூர் திருத்தாண்டகம்

77. எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே ந

திருவையாறு திருவிருத்தம்

78. எழுவா யிறுவா யிலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநரகக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாறனடித்தலமே ரு

திருவின்னம்பர் திருக்குறுந்தொகை

79. என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாளொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப் புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே க

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

80. ஏறுட னேழடர்த்தா னெண்ணியா யிரம்பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை யர்ச்சித்தா னடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணையீண்டக்
கூறுமோ ராழியீந்தார் குறுக்கைவீ ரட்டனாரே ரு

கோயில் திருவிருத்தம் பண் கொல்லி

81. ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் சடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்க டில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே உ

திருவையாறு திருத்தாண்டகம்

82. ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ க

திருவையாறு திருவிருத்தம்

83. ஓதிய ஞானமு ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதிபோ
டாதியு மந்தமு மானவை யாற னடித்தலமே எ

திருக்கச்சியேகம்பம் திருவிருத்தம்

84. ஓதுவித் தாய்முன் னறவுரை காட்டி யமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்

போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே க

திருவொற்றியூர் திருநேரிசை

85. ஓம்பினேன் கூட்டைவாளா வுள்ளத்தோர் கொடுமைவைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூ ருடையகோவே க

திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

86. கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே சு

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

87. கல்லினா லெறிந்துகஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறுணாமே நீள்விசும் பாளவைத்தார்
எல்லியாங் கெரிகையேந்தி யெழிறிகழ் நட்டமாடிக்
கொல்லியாம் பண்ணுகந்தார் குறுக்கைவீ ரட்டனாரே சு

திருநீலக்குடி திருக்குறுந்தொகை

88. கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வய னீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே எ

திருவையாறு திருவிருத்தம்

89. களித்துக் கலந்ததோர் காதற்கசிவொடு காவிரிவாய்க் [தேன்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில்செந்

தெளித்தச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே ௭

திருமறைக்காடு திருத்தாண்டகம்

90. கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் றோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே ௪

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

91. காப்பதோர் வில்லுமம்புங் கையதோ ரிறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள்செய்ய குருதிநீ ரொழுகத்தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கைவீ ரட்டனாரே ௭

திருக்கொண்டீச்சரம் திருநேரிசை

92. கால்கொடுத் தெலும்புமூட்டிக் கதிர்நரம் பாக்கையார்த்துத்
தோலுடுத் துதிரமட்டித் தொகுமயிர் மேய்ந்தகூரை
ஓலெடுத் துழைஞர்கூடி யொளிப்பதற் கஞ்சுகின்றேன்
சேலுடைப் பழனஞ்சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளானே ௩

கோயில் திருவிருத்தம் பண்—கொல்லி

93. குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே ௪

பொது ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

94. கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே ரு

திருவாரூர் திருவிருத்தம்

95. கொடிகொள் விதானங் கவரி பறைசங்கங் கைவிளக்கோ
டிடிவில் பெருஞ்செல்வ மெய்துவ ரெய்தியு மூனமில்லா
அடிகளு மாரூ ரகத்தின ராயினு மந்தவளப்
பொடிகொண் டணிவார்க் கிருளொக்கு நந்தி புறப்படிலே சு

திருவிராமேச்சுரம் திருநேரிசை

96. கோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மையெல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்புகொண்டு
தேடிமால் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமே நீ நன்னெறி யாகுமன்றே கூ

திருவையாறு திருவிருத்தம்

97. சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முக்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறைபணிந் தாடுமை யாற னடித்தலமே அ

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

98. சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்தபோதே கோச்செங்க ணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே ச

போது தனித்திருவிருத்தம்

99. சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே கூ

திருமங்கலக்குடி திருக்குறுந்தொகை

100. செல்வ மல்கு திருமங் கலக்குடி
செல்வ மல்கு சிவனிய மத்தராய்ச்
செல்வ மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் றேவி யொடுந்திகழ் கோயிலே

போது தனித்திருக்குறுந்தொகை

101. ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே கூ

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

102. தழைத்ததோ ராத்தியின்கீழ்த் தாபர மணலாற்கூப்பி
அழைத்தங்கே யாவின்பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் றாதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுதமீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே கூ

போது தனித்திருத்தாண்டகம்

103. திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகி
லுண்பதன்முன் மலர் பறித்திட் டுண்ணா ராகில்

அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி
லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே ௬

திருவதிகைவீரட்டானம் திருவடித் திருத்தாண்டகம்

104. திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வா வடி
யுருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி ௬

திருவாவடுதுறை திருத்தாண்டகம்

105. திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமர ரேறே ௧

திருவையாறு திருவிருத்தம்

106. துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர் [தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய்யொ [ருந்தா
அன்பர்க் கணியன காண்கவை யாற னடித்தலமே ௬

திருநாகைக்காரோணம் திருவிருத்தம்

107. தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக் காரோணநின்
நாமம் பரவி நமச்சி வாயவென் னுமஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள் சங்கரனே ௩

திருவின்னம்பர் திருக்குறுந்தொகை

108. தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றாற்றுகின் றூரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே அ

பொது தனித்திருத்தாண்டகம்

109. நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னு
ணிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே சு

திருநல்லூர் திருவிருத்தம்

110. நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றேயிவ் வகலிடமே எ

பொது மறுமாற்றத் திருத்தாண்டகம்

111. நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே க

திருக்காளத்தி திருத்தாண்டகம்

112. நாரணன்கா ணான்முகன்கா ணால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவா யன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் றான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் றான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் றான்காண்
டன்மைக்கட் டானேகாண் டக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன் காணவனென் கண்ணு ளானே ௩

திருப்பூவணூர் திருக்குறுந்தொகை

113. நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்றிருப் பூவணூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே ௧௦

திருவாரூர் திருத்தாண்டகம்

114. நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்

அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே ௬

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

115. நிறைமறைக் காடுதன்னி னீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன்மூக்குச் சுட்டிடக் கனன்றுதூண்ட
நிறைகடன் மண்ணும்விண்ணும் நீண்டவா னுலகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே அ

பொது தனித்திருத்தாண்டகம்

116. நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய் றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானா யென்னானா யென்னி னல்லா
லேழையே னென்சொல்லி யேத்து கேனே எ

திருக்குறுக்கைவீரட்டம் திருநேரிசை

117. நீற்றினை நிறையப்பூசி நித்தலு நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு மந்தண னாரைக்கொல்வான்
சாற்றுநா ளற்றதென்று தருமரா சற்காய்வந்த
கூற்றினைக் குமைப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே உ

பொது ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

118. நூறு கோடி பிரமர்க ணொந்தினார்.
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே ௩

திருவிஞ்சயமங்கை திருக்குறுந்தொகை

119. பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டு நல்வரங் கொள்வி சயமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந் தாசையால்
காண்ட லேகருத் தாகியி ருப்பனே அ

திருச்சிவபுரம் திருத்தாண்டகம்

120. பாரவன்காண் பாரதனிற் பயிரா னான்காண்
பயிர்வளர்க்குந் துளியவன்காண் டுளியி னின்ற
நீரவன்கா ணீர்சடைமே னிகழ்வித் தான்கா
ணிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே க

திருப்பூவனூர் திருக்குறுந்தொகை

121. பூவ னூர்ப்புனி தன்றிரு நாமந்தான்
நாவி னூறுநா றுபிர நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே க

திருமருகல் திருக்குறுந்தொகை

122. பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே க

திருவையாறு திருவிருத்தம்

123. பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர் முடிமேல்

மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமு மொக்குமை யாற னடித்தலமே க

திருக்காளத்தி திருத்தாண்டகம்

124. மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தா னிமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிப்பாற் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே ரு

திருவொற்றியூர் ✓ திருநேரிசை

125. மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணு
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடையகோவே உ

திருவதிகைவீரட்டானம் திருநேரிசை

126. மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி
ஒன்றினா லுணரமாட்டே னுன்னையுள் வைக்கமாட்டேன்
கன்றிய காலன் வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றினா லலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே அ

திருவாவடுதுறை திருநேரிசை

127. மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலும்
காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரங் கொடுப்பர்போலு மாவடு துறையனாரே க

திருவாரூர் திருத்தாண்டகம்

128. முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தா
ளகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாடன் னாமங் கெட்டா
டலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே ௭

பொது ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

129. வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே ௪

திருவாலவாய் திருத்தாண்டகம்

130. வாயானை மனத்தானை மனத்து ணின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னைச்
சுடர்த் திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே ௮

பொது தனித் திருவிருத்தம்

131. வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையுந்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே ௮

போது    தனித் திருவிருத்தம்

132. விண்ணகத் தான்மிக்க வேதத்து ளான்விரி நீருடுத்த
மண்ணகத் தான்றிரு மாலகத் தான்மரு வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத்துளான்பழ நாயடியேன்
கண்ணகத் தான்மனத் தான்சென்னி யானெங் கறைக்
கண்டனே ௧

போது    சிவனெனுமோசை

பண்—பியந்தைக் காந்தாரம்

133. விரிகதிர் ஞாயிரல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதருவாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளிநீருமல்லர் தெரியில்
அரிதருகண்ணியாளை யொருபாகமாக
வருள் காரணத்தில் வருவார்
எரியரவாரமார்ப ரிமையாருமல்ல
ரிமைப்பாருமல்ல ரிவரே ௨

போது    தனித் திருநேரிசை

134. விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே ௩

கோயில்    திருவிருத்தம்

பண்—கொல்லி

135. வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த [னே
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென் ௪

திருச்சிற்றம்பலம்.